# சகாய அஞ்சல்

இடைவிடா சகாய அன்னை ஆலயம், அஞ்சல் நகர், மதுரை-18.

பங்கு: 0452-2661232 அருளகம்: 0452-2660297
பங்குத் தந்தை: 90805-09655

Website: www.cssrchurchmadurai.in

மலர்-35 ✪ ✪ ✪ ஜுன்-2015

## அஞ்சலின் உள்ளே......

| | பக்கம் |
|---|---|
| பங்குத்தந்தையிடமிருந்து | 02 |
| தலையங்கம் | 02 |
| கவிதை கார்னர் | 09 |
| புனிதர் பக்கம் | 12 |
| நிகழ்வுகள் | 14 |
| சிந்தனைகள் | 23 |
| சிறுவர் பூங்கா | 25 |
| இளையோர் பக்கம் | 28 |
| வரவு–செலவுகள் | 35 |

**ஆசிரியர் குழு**

திரு. **I. தோமினிக் சாவியோ** (பொறுப்பாசிரியர்) **99940-95346**
திரு. **J. பிரான்சிஸ் பாலா** (பங்குப்பேரவைத் துணைத் தலைவர் நிதி பொறுப்பு) **94420-92020**
திரு. **M. செல்வராஜ்** (அன்பிய ஒருங்கிணையம்) **80123-08552**
திரு. **A. கிறிஸ்டோபர் செல்ஸ்** (விளம்பரங்கள்) **94430-67611**
திரு. **S. ஜெயராஜ்** (சிந்தனைகள்) **94874-45365**
திருமதி. **A. இவான் ரூபி பீட்டர்** (சிறுவர் பூங்கா) **94439-60763**
திருமதி. **A. ஜெஸி/குயின்மேரி சுரேஷ்** (புனிதர் பக்கம்) **94867-29102**
செல்வி. **S. ஜெரால்னி மஜெல்லா** (இளையோர் பக்கம்) **99441-15837**
திரு. **I.P. சாமுவேல்** (நிகழ்வுகள்) **98421-81821**
திரு. **I. தோமினிக் சேவியர்** (கவிதை கார்னர்) **94420-45647**
**Fr. ஜான் ஜோசப் கென்னடி** (பங்குத்தந்தை) **90805-09655**



*என் பாசத்திற்குரிய பங்கு மக்களே!*

உங்கள் அனைவரையும் சகாய அஞ்சல் மூலமாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன், அன்னையின் வணக்க மாதத்தை சீரும் சிறப்புமாக அன்பியம் அன்பியமாக சேர்ந்து வந்து செபவழிபாடு நடத்தியது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. சில அன்பியங்கள் மிகவும் சிறப்பாகவும் சில அன்பியங்கள் சிறப்பாகவும், செபமாலை வழிபாட்டை நடத்தினார்கள். அதுவும் எனக்கு மகிழ்ச்சியே. காரணம் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் அனைவரும் ஒன்றாய் இருப்பதில்லையே. ஆனாலும் சோர்ந்து கிடக்கின்ற பிள்ளைகளையும் உற்சாகத்தோடு தட்டிக்கொடுத்து மிகவும் சிறப்பாக செயல்பட நாம்தான் ஊக்குவிக்க வேண்டும் அல்லவா? எனவே உங்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.

குறிப்பாக மே மாதம் 31ந்தேதி மாலையில் நாம் அன்னையின் செபமாலை பவனி சிறப்பாக நடக்க நீங்கள் கொடுத்த ஒத்துழைப்பு என்னைக் கவர்ந்தது. திடீரென்று காலையில் அறிவித்தாலும் ஏராளமான சகோதர சகோதரிகள் அதிலே கலந்து கொண்டீர்கள். பதாகை ஏந்தியும், செபமாலை செபித்தும், வரிசையாக வந்தும், வீண்பேச்சு பேசாமலும் செப உணர்வோடு கலந்து கொண்டு செபித்தது எனக்கு மட்டும் அல்ல வெளிப்பங்கிலிருந்து வந்த மக்களுக்கும் முன்மாதிரியாக இருந்தது.

நம் பங்கைச் சாராத வேறொரு குருவானவர் தனது மறையுரையில் அஞ்சல் நகர் பங்கு ஒரு முன் உதாரணம் என்று சொன்னதாக அந்த நண்பர் என்னிடம் கூறினார். இதை, இதை... இதைத்தான் நான் உங்களிடம் தொடர்ந்து எதிர்பார்க்கிறேன்.

விடுமுறை விவிலிய பள்ளி நிகழ்வுகள் மிகவும் அற்புதமாக நடந்தன. உங்கள் பிள்ளைகளை அனுப்பி வைத்ததால் மட்டுமே நல்லவிதமாக நடத்த முடிந்தது. ஒருசில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்காதது மனதுக்கு வருத்தமாக இருந்தாலும் இனி வரும் காலங்களில் அனுப்பி வைத்து தங்கள் பிள்ளைகளையும் ஆன்மீகத்தில் வளர்த்து வருவார்கள், வளர உதவுவார்கள் என உறுதியாய் நம்புகிறேன்.

அன்று மாலை விவிலிய கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு நம் பங்கு பிள்ளைகளை உற்சாகப்படுத்தினீர்கள்.. அதற்கும் என் நன்றிகள்.

இது நமது பங்கு என்ற எண்ணம், உணர்வு வந்தாலேபோதும் நாம் எவ்வளவோ சாதிக்கலாம். நான், என்றும் உங்களிடம் எதிர்பார்ப்பது உங்களின் ஒத்துழைப்பை மாத்திரமே. என்னை உங்களில் ஒருவனாக ஏற்றுக் கொண்ட நீங்கள், என்னோடு ஒத்துழைக்க வேண்டாமா? நமது ஆலயத்தை நமது பங்கை முன்னோடியான பங்காக மாற்ற நாம் ஒருவரோடொருவர் ஒத்துழைப்போம் அன்பார்ந்த மக்களே .

ஹலோ இன்னொரு விஷயம் சொல்லனுமே உங்ககிட்ட?

நம் தாயின் திருவிழா இன்னும் இரண்டு வாரத்துல கொண்டாட இருக்கின்றோம். இது என்னோட தலைத்திருவிழா இல்லையா, வருடம்போல ஏன் அதைவிட சிறப்பாக கொண்டாட வேண்டும் என்ற ஆசை உங்களுக்கும் இருக்கும்தானே. அதிலும் சிறப்பாக இந்த ஆண்டு விஷேசமான ஆண்டு. காரணம், "மரியாளை உலகறிய செய்யுங்கள்" என்ற கட்டளை 9ம் பத்திநாதரால் கொடுக்கப்பட்ட 150 வது ஆண்டு ஜுபிலியும்கூட அதற்காக சில திட்டங்களை தீட்டிக் கொண்டு இருக்கின்றோம். எனவே நம் அன்னையின் நவநாள் திருப்பலிகளில் எல்லா அன்பியக் குடும்பங்களில் உள்ள ஆண்களும் பெண்களும், பெரியவர்களும் சிறியவர்களும் கலந்து கொண்டு ஆக்கபூர்வமாக செயல்பட்டு அன்னையின் பக்தி முயற்சியை வளர்ப்போம்.

எனவே நீங்கள் அன்றுபோல் இன்றும், இன்றுபோல் என்றும் எனக்கு ஒத்துழைப்பு தந்து நம் தாயின் இடைவிடா சகாய அன்னையின் பெருவிழாவைக் கொண்டாடுவோம்.

அன்னையின் பரிந்துரை நம் அனைவருக்கும்.

அன்புடன்

**அருட்தந்தை ஜான் ஜோசப் கென்னடி** C.Ss.R.

பங்குத்தந்தை

# நம் அன்னை விழா

மூவொரு இறைவனின் அன்பில் உருவான உறவுகளே! வணங்கி மகிழ்கிறேன். இறை அன்னையின் வணக்கமாதம் சிறப்பாக கொண்டாடி முடித்து அன்னைக்கு புகழஞ்சலி செலுத்திய ஒவ்வொரு அன்பியத்திற்கும் அன்பின் பாராட்டுகள்! VBS பயிற்சிப் பாசறையில் இறை அனுபவத்தைப் பெற்ற பெற்றுத்தந்த இளம் சிறார்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வாழ்த்துகள்! பாராட்டுக்கள்!

நம் இடைவிடா சகாய அன்னைக்கு நாம் எடுக்கும் அன்பின் விழா! இவ்விழாவை சீரோடும் சிறப்போடும் அர்த்தமுள்ள ஆன்மீகம் உள்ளடக்கிய விதத்தில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாட அழைக்கப்படுகிறோம். “அருள் நிறைந்தவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே...” என்று இறைவன் நம் அன்னையை மெச்சுவதுபோல, நம்மையும் இணைத்துக் கொள்ள ஒன்பதுநாள் தயாரிப்பும், விழாவும் நம்மை பாராட்ட, வழிநடத்த வேண்டும்.

நம் பங்குத் திருவிழாவில் இடைவிடா சகாய அன்னை நமக்கு விடுக்கும் அழைப்பு “அவர் சொல்வதை எல்லாம் செய்யுங்கள்” என்பதை மனதில் இறுத்திக் கொள்வோம். நம் முழுமனதோடும், உள்ளத்தோடும், ஆற்றலோடும், துணிவுடன் உரிமையோடு நம் திருவிழாவைக் கொண்டாடுவோம். ஒத்துழைத்து ஓங்குபுகழ் வான்சேர, வையத்தில் வாழ்வாங்கு வாழ, மூஒரு இறைவனின் ஒற்றுமையுடன், தனித்தன்மையுடன் சிறப்பாக கொண்டாடுவோம். அனைவருக்கும் அன்பின் திருவிழா வாழ்த்துக்கள்!

அன்புடன்

**I. தோமினிக் சாவியோ**

பொறுப்பாசிரியர்

# அன்பு....

அன்பின் வடிவமாய் அருளின் பிறப்பிடமாய்
இறையாட்சியின் உறைவிடமாய் விளங்கிடும்
அன்னையின் அருள்மழையில் நனைய
இனிதே தேர்ந்தெடுத்தோம் மே திங்களை!
ஒவ்வொரு நாளும் உம்மைப்புகழ
அன்பியங்களின் வருகையில் அகமகிழ்ந்து
தாழ்மையுடன் உம்மை நாடி நின்ற
பக்தர்களின் உள்ளங்களில் இனிதே தங்கி
இறையாசீரை தாராளமாய் வழங்கி நின்றாய்
முப்பது நாள்களும் நிறைந்த முழுமதியாய்
ஒளிபொருந்திய ஞாயிறாய் சுடர்விட்டாய்
புவியின் வெம்மை தணிய
வறட்சியில் குளிர்ச்சியைக் கண்டிட
மாரியை மகிழ்ச்சியாய் வழங்கி நின்றாய்
அன்னையே கரம் குவித்து வணங்குகிறோம்
எம்குறை களைந்து அருளாசீர் வழங்குவாயே!

**செ. பாலின் சோபியா**
குழந்தை இயேசு அன்பியம்

# அன்னை....

மரியன்னையின் மங்கா புகழினை
அனைவரும் கண்டிடவே
புகழ்ச்சி மாலையை பறைசாற்றினோம்
சகாயத் தாயின் பரிந்துரையை நாடி
கூடல் மாநகர் குதுகலித்தது
மக்களின் வெள்ளத்தில் அணி செய்தது
அருள் தந்தையர்களின் பொற்கரங்களில்
அன்னையின் புகழை விண்ணுலகம் கண்டிட
இனிதே ஏற்றுவோம் கொடியினை நன்றாய்
மறையுரைகளின் புகழ்ச்சி உரைகளால்
மங்காப் புகழில் மாட்சி பெறுவாய்
மக்களின் எழுச்சியில் ஏற்றம் காண்பாய்
அன்னைக்கு மணிமகுடம் சூட்டிட
அன்னையின் பாதம் பணிவோம்
இனிதே நல்லாசீரை பெறுவோம்!

**இ.டோமினிக் சேவியர்**
குழந்தை ஏசு அன்பியம்



மரியே வாழ்க

அன்னையின்றி ஏது வெற்றி....?
அன்னையிருக்க ஏது தோல்வி...?

இடைவிடா சகாய அன்னை
ஆண்டு திருவிழாவிற்கு வருக....
அன்னையின் ஆசீர்
நிறைவாக பெறுக.

திருவிழா வாழ்த்துக்களுடன்

**I. ஜோசப் சேவியர்**
**I.அந்தோணி பிரிட்டோ**
(புனித குழந்தை தெரசா அன்பியம்)



அலைபேசி: **97868-34389**
**99445-25152**
**99435-03133**

இடைவிடா சகாயத் தாயின்

பக்தர்களுக்கு திருநாள் நல்வாழ்த்துக்கள்.

# "JESUS GIFT"

## BUILDERS



**சிறந்த முறையில் வீடுகள் கட்டித் தரப்படும்.**

## Er. JEYALOOR SEKAR

B.E., D.C.E., D.C. Tech., A.C.P., B.A., B.Ed.,

Cell: **98421-84390**

**``Jesus Gift"**

2/315-B, Behind Jeeva Theatre,

Near Govt. Hospital,

Sikkandar Savadi, Madurai.

email: jesusgiftbuilders@gmail.com

# புனித கஸ்மிர் (St. Casmir)



போலந்து நாட்டின் அரசர் நான்காம் கஸ்மிருக்கும் ஆஸ்திரியா நாட்டு எலிசபெத்துக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தவர்தான் இளவரசர் கஸ்மிர். இவர் தமது ஒன்பதாவது வயதிலிருந்தே மிகுந்த பக்தயுடையவராக இருந்தார். ஆண்டுகள் செல்லச் செல்ல கடுமையான சீதோஷ்ண நிலையிலும் தன்னை மறந்த நிலையில் பூட்டப்பட்ட ஆலயத்தின் முன் முட்டிப்போட்டு செபிப்பதில் நீண்டநேரம் செலவழித்தார். மயிராடை அணிந்து நோன்பு இருப்பதையும், வெறும் தரையில் படுத்துத் தூங்குவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

திருப்பலி காண்பதிலும் மாதாவை ‘‘நல்லதாய்’’ என அழைத்து அவர்களை வாழ்த்திப் பாடுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். தான் ஒரு இளவரசராய் இருந்தபோதிலும் இந்த பக்தி முயற்சிகளைக் கடைபிடிப்பதில் கருத்தாயிருந்தார். ஏழைகள் மட்டில் எல்லையில்லா அன்பும் இரக்கமும் கொண்டு அவர்களுக்கு உதவிகள் செய்வதில் இன்பம் கொண்டார். எனவே இவர் ‘‘ஏழைகளுக்கும் இழிந்த நிலையில் உள்ளவர்களுக்கும் தந்தை’’ என அழைக்கப்பட்டார்.

லித்தூனியா நாட்டில் அவரது தந்தை நீண்ட நாட்கள் ஆட்சி செய்ய இயலாத காரணத்தால் இந்த புனிதரே நாட்டின் அரசராகப் பதவியேற்று 1481 முதல் 1483 வரை சிறந்த முறையில் நாட்டை ஆட்சி செய்தார். திருமணம் ஆகாத நிலையில் கொள்ளை நோயினால் பாதிக்கப்பட்டு தனது 26–வது வயதிலேயே இறைபதம் சேர்ந்தார்.

திருத்தந்தை ஆறாம் அதிரியான் அவர்களால் புனிதராக அறிவிக்கப்பட்டார். இவரது உடல் 122 ஆண்டுகள் ஆகியும்

அழியாத நிலையில் இருந்தமையால் போலந்து, லித்தூனியா நாடுகளின் பாதுகாவலராகவும் கொள்ளைநோயுற்றோரின் பாதுகாவலராகவும் பிரகடனப்படுத்தப்பட்டார்.

ஒறுத்தல், நோன்பு, செபம், ஏழைகள் மட்டில் இரக்கம் கொள்ளுதல் இவையே இறைவனை நோக்கிச் செல்லும் ஏணிப்படிகள் என்பதை உணர்ந்து நாமும் இப்புனிதரின் வழி வாழ முயலுவோம்.

A. ஜெஸி
புனித சவேரியார் அன்பியம்

## புனித குழந்தை இயேசுவின் தெரசாள் அவர்களின் உயர்ந்த கருத்துரைகள் -

1. ஆன்மா தரிசு நிலத்திற்கு ஒப்பானது. மாதா மரியாளின் உதவியால் அதிலுள்ள மாசுகளை மாற்ற வேண்டும். பின்னர் அதன்மீது விசாலமான விண்ணகக் கூடாரத்தை அமைக்க வேண்டும்.
2. கிறிஸ்துவின் பத்தினியாக வாழ்வதே மிக உயர்ந்த அறம்.
3. உன்னை பிறர் ஆயிரக்கணக்கில் திட்டினாலும் நீ சகித்துக் கொள். ஆனால் ஒருமுறை கூட பிறரைத் திட்ட முன்வராதே.

A. ஜெஸி
புனித சவேரியார் அன்பியம்

# சதங்கை அகாடமி

**பல்கலைக்கழகம் வழங்கும் சான்றிதழும் மற்றும்**
**பட்டயப் படிப்பிற்கான கலைக்கல்லூரி**

## பகுதி நேர கலை வகுப்புகள்

1. பரத நாட்டியம்
2. வாய்ப்பாட்டு இசை
3. கீ–போர்டு
4. டிரம்ஸ்
5. கிட்டார்
6. சிலம்பம், யோகா
7. ஸ்கேட்டிங்
8. ஆடியோ & வீடியோ எடிட்டிங்
9. கம்ப்யூட்டர் பயிற்சி (+2 Tution)
10. கிராமிய நடனம்

**பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்ற பாடப் பிரிவுகள்**

**பரதம்**

(சான்றிதழ் மற்றும் பட்டயம்)

**தென்னிந்திய (கர்நாட்டிக்) இசை**

(சான்றிதழ் மற்றும் பட்டயம்)

வகுப்புகள் நடைபெறும் நேரம்:
சனிக்கிழமைகளில்: மாலை 4 மணி முதல் 6 மணி வரை
ஞாயிற்றுக்கிழமைகளில் : காலை 10 மணி முதல் 12 மணி வரை

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**முதல்வர்**

**சதங்கை அகாடமி**

**கூடல் நகர், மதுரை-625018**

போன்: **2660926, 2660447**

**இடைவிடா சகாய அன்னை பங்கு மக்கள்**
**அனைவருக்கும் திருநாள் நல்வாழ்த்துக்கள்**





- 100% இயற்கையானது
- 100% கெமிக்கல் இல்லாதது
- 100% பக்க விளைவுகள் இல்லாதது
- குழந்தைகளுக்கும் பாதுகாப்பானது. நறுமணமிக்கது.
- கொசுக்களின் தொந்தரவு இல்லாத நிம்மதியான ஆழ்ந்த தூக்கத்தை பெறலாம்.

Manufactured and Marketed by:
**Preethi Laboratories**
No-16, Appathurai Nagar, 1st Street, Madurai-625 018.
Customer Care No. **095979-57702, 0452-2666161**

# "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்."

அன்பிற்கினிய பங்கு மக்கள் அனைவருக்கும் இளையோரின் இனிய வணக்கங்கள்

இறைவன் என்ற எழில்மிகு தலைவன் வழிநடத்துதலில் நாம் இந்த ஆண்டின் பெந்தகோஸ்து பெருவிழாவைக் கடந்துவிட்டோம். எனவே எமது பக்கத்தில் சிந்தனையாக மாற்கு எழுதிய நற்செய்தியின் (மாற்கு (16:15) ) எடுத்துக் கொண்டேன்.

வானில் உள்ள விண்மீனும்
காற்றிலுள்ள இசையும்
கடலிலுள்ள அசைவும்
உயிரினங்களின் வாழ்வும்
உலகிலுள்ள யாவும்

இறைவனின் நற்செய்தியை பறைசாற்றிக் கொண்டுதான் இருக்கின்றன.

நம்மில் பலருக்கு நற்செய்தி பறைசாற்றுதல் பற்றிய தவறான எண்ணங்களும் உண்டு.

குருக்களும் கன்னியர்களும் மட்டுமே இதை செய்ய வேண்டும் என பலரின் புரிந்து கொள்ளாநோக்கம்.

அப்படி நினைப்பவர்களுக்கு ஒருசில விஷயங்களை எடுத்துரைக்க ஆசைப்படுகின்றேன்.

நற்செய்தி பறைசாற்றுதலில் பல வகை உண்டு பிரசங்கம்வழி பறை சாற்றுதல், செயல்வழி நற்செய்தி பறைசாற்றுதல், வாழ்க்கைவழி நற்செய்தி பறைசாற்றுதல், சிந்தனைவழி நற்செய்தி பறைசாற்றுதல்

இவை அனைத்து வகையிலும் ஒரு பொதுநிலையினர் தாராளமாக நற்செய்தியை 100 சதவீதம் பறைசாற்றலாம்.

பழைய ஏற்பாட்டில் குருவாக தேர்ந்தெடுக்கப்பட்ட லேவியர்கள் பொதுநிலையினராக இருந்து இறைவன் பணி செய்தவர்களே.

புதிய ஏற்பாட்டின் புரட்சிதலைவர் இயேசு கிறிஸ்து பொதுநிலையினருக்குதான் இவ்வாறு கூறினார். "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்", "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" "என் தந்தை என்னை அனுப்பியதுபோல நான் உங்களை அனுப்புகிறேன்" என்றெல்லாம் கூறியுள்ளார்.

மனிதன் பொய் சொல்லலாம். ஆனால் இறைவார்த்தை என்றும் பொய்ப்பதில்லை (மாறுவதுமில்லை)

நாம் மிகப்பெரிய காரியங்களையெல்லாம் செய்துதான் நற்செய்தி அறிவிக்க வேண்டுமென்று அவசியமில்லை.

நமது சிறிய சிறிய நற்செயல்கள் மூலமாகவும் சிறிய நல்லெண்ணங்கள் மூலமாகவும், நம்முடைய அயலவர்களிடம் பேச்சுப் பகிர்வின் மூலமாகவும், கிறிஸ்துவாக வாழ்ந்து கிறிஸ்தவனாக நற்செய்தியை பறைசாற்றலாம்.

இதை நான் சொல்லலங்க, இறைவார்த்தை சொல்கிறது. எனவே தூய ஆவியின் துணையோடு நற்செய்தி பறைசாற்றி இறைவனின் அரசை கட்டிடுவோம்.

என்றும் இறைவனின் நற்செய்தி பறைசாற்றுதலில் இப்பங்கின் இளையோர்கள்

"அன்பின் ஆட்சியை விதைக்க
ஆண்டவன் அரசை வளர்க்க
இயற்கையோடு இணைந்து
இயேசுவின் நற்செய்தியை
பறைசாற்றுவோம்"

இப்படிக்கு உங்கள் சகோதரி
**சூ. ஜெராலினி மெஜெல்லா**

# இளைஞர் இயக்கம்

பங்கின் புதுத் தொடக்கம், புது இரத்தம் பெற்று புறப்பட்டிருக்கிறது. அருட்தந்தை ஜான் ஜோசப் கென்னடி அவர்களின் வழிகாட்டதலில் இளைஞர் இயக்கமும் பெருவளர்ச்சியினை எதிர்நோக்கி இருக்கின்றது. அருட் தந்தையை அருளிய இறைவனுக்கு நன்றிகள்.

மாதாவின் வணக்க மாதத்தில், எங்களை கரம் பிடித்து, மாதா அழைத்துச் சென்ற இடம் தென்காசி. அங்கு, புதுவாழ்வு தியான மையத்தில் மே மாதம் 22, 23, 24 ஆகிய தேதிகளில் ‘இளைஞர்களுக்கான அக்னி முகாமில்’ பங்கு பெற்றும் தூய ஆவியை நிரம்பப்பெற்றுத் திரும்பினோம். எங்களுக்கு அருள்புரிந்த ஆண்டவருக்கும் துணை புரிந்த ஆசிரியை திருமதி.ரெஜினா அவர்களுக்கும் நன்றிகள்.

மேலும் மே 30 அன்று, ஆண்டவரின் அன்னைக்கு ஜெபமாலை ஜெபித்து வாழ்த்தி வணங்கினோம்.

தொடர்ந்து விண்ணக அரசியை நாம் கொண்டாடும் திருவிழாவினை ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

இந்த நேரத்தில், பள்ளிகளுக்கு செல்லத் தொடங்கி யிருக்கும் எங்கள் அன்பு உடன்பிறப்புகளுக்கு வாழ்த்து கூறி மகிழ்கிறோம். கோயிலில் மறைக்கல்வி கற்பதைபோல, பள்ளியில் ஓர் ஆன்மீக அனுபவத்தை அவர்கள் பெற ஆண்டவரிடம் வேண்டுகிறோம்.

பள்ளிக்கல்வியை முடித்துவிட்ட தோழர்களுக்காக, இளைஞர் இயக்கத்தின் வாயிலை அகலத்திறந்து வைத்து, காத்து இருக்கின்றோம். அவர்களுக்கு இறைவன் வழிகாட்ட, அன்னையுடன் இணைந்து ஜெபிக்கின்றோம் பங்கின் இளைஞர்கள்.

**தோ. டால்டன்**
இளைஞர் இயக்கம்.

அன்புள்ள குட்டீஸ் எப்படியிருக்கீங்க?

விடுமுறை முடிந்துவிட்டது. புதுக்கல்வியாண்டு புலர்ந்து விட்டது. புதுத்தெம்புடன், புதுநடையுடன், புதுத்திட்டங்களுடன், புதுக்கனவுகளுடன், புது இலட்சியத்துடன் 2015–2016 ஆம் கல்வி ஆண்டினை வரவேற்போம்.

அதிகாலையில் எழும் பழக்கத்தையும், கடவுளை வணங்கி கடமையை கருத்துடன் ஆற்றும் ஆவலையும், பாதுகாப்பான பயணத்தையும், முழுமையான ஆளுமை வளர்ச்சியான கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, பண்புநலன் மற்றும் கலைத்திறமை அத்தனையும் கவினுறக்கற்று, சபாஷ் போட வைக்க வீறுநடைபோடுங்கள்.

கற்றுக்கொள்ள வேண்டிய காலக் கட்டங்களில் ஆர்வத்தோடு, ஈடுபாட்டோடு கற்றுக்கொண்டால் அதன்பயன் ஆயுள் முழுவதும் பலன் அளிக்கும் என்பதை மறக்க வேண்டாம். உலகெங்கிலும் வாழும் இந்தியர்கள் பெருமைமிகு பணிகளில் பொறுப்பேற்கும் போது இந்தியாவில் கற்றக்கல்வியே எங்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும் என்று வீரமுழக்கமிட்டு பெருமை கொள்கின்றனர்.

பெற்றோரின் அன்புக்கு கட்டுப்பட்டு, ஆசிரியரின் அறப்பண்புகளை உள்வாங்கிக் கொண்டு, சான்றோரின் வாழ்வினை முன்மாதிரியாகக் கொண்டு, கடவுளை உள்ளத்தில் தாங்கிக் கொண்டு கல்விப்பயணத்தை இனிதே தொடர இனியநல் வாழ்த்துக்கள்.

அன்புள்ள ஆன்ட்டி

**அ. ஈவான் ரூபி பீட்டர்**

**குடும்பத் தலைவர்**

நமது பங்கின் புதிய பங்கு தந்தையாக அருட்பணி.ஜான் ஜோசப் கென்னடி C.Ss.R. அடிகளார் 12.04.2015 அன்று பொறுப்பேற்றார். அவருக்கு நமது சகாய அன்னை குடும்பங்களின் சார்பாக வரவேற்பும் வாழ்த்துக்களும்.

**இயேசுவின் கண்மணிகள்**

03.05.15 அன்று விடுமுறை வேதாகம பள்ளி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 03.05.15 முதல் 09.05.15 வரை மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றது. தினமும் நமது குழந்தைகள் இறைவார்த்தைகளை கேட்டு, பயனடைந்தார்கள். 09.05.15 அன்று VBS குழந்தைகளின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. கலந்து கொண்ட குழந்தைகளுக்கும், பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள்.

**மாதாவுக்கு வணக்கம்**

01.05.15 முதல் 31.5.15 வரை வணக்க மாதா சிறப்பு நிகழ்வுகள் தினமும் மாத கெபியில் நடைபெற்றது. மிகுந்த உற்சாகத்துடனும் பக்தியுடனும் அனைத்து அன்பியங்களும் பங்குபெற்று சிறப்பித்தனர். இறுதிநாள் நிகழ்வாக 31.5.15 அன்று நமது பங்கின் கோபுரக் கெபியிலிருந்து கோவிலை சுற்றி வந்து மாதா கெபியில் சிறப்பு செய்து ஜெபமாலை கூறினர். இந்த புதிய முயற்சி அனைவரது பாராட்டுகளையும் பெற்றது. சுமார் 300 நபர்கள் கலந்து கொண்டனர்.

**பேரவைக் கூட்டம்**

03.05.15 அன்று பங்குபேரவை கூட்டம் நமது புதிய பங்கு தந்தை முன்னிலையில் நடைபெற்றது.

**வீடு மந்திரிப்பு**

பாஸ்கா வீடுமந்திரிப்பு நமது பங்குதந்தை அவர்கள் அனைவரது வீடுகளுக்கு சென்று மந்திரித்து ஆசி கூறினார்

**தேவ அழைத்தல் முகாம்**

இரட்சக சபையின் தேவஅழைத்தல் முகாம் 18.5.15 மற்றும் 19.5.15 அன்று நமது பங்கில் நடைபெற்றது.

**ஆனையூர் முகாம் திருவிழா**

ஆனையூர் முகாம் அன்னை வேளாங்கன்னி சிற்றாலய திருவிழா 22.5.15 முதல் 30.5.15 வரை சிறப்பாக நடைபெற்றது.

**கூட்டம்**

07.06.15 அன்று அன்பிய பொறுப்பாளர்கள் மற்றும் பேரவை உறுப்பினர்கள் இணைந்த கூட்டம் நடைபெற்றது.

**பங்குத் திருவிழா**

திருவிழா பற்றி விபரங்கள் திருவிழா நோட்டிஸில் பார்த்து பயன்பெறவும்.

திருத்தம்

ஆலயத்தின் பின்புறம் இரட்சகர் சபையினரின் கல்லறைத் தோட்டம், அருட்தந்தை ஜான் ஜோசப் கென்னடி C.Ss.R. அமைக்கப்பட்டது.

ஆலய சுற்றிய நடைபாதை மற்றும் அதிதூதர் மிக்கேல் கெபி கட்டப்பட்டது. அருட்தந்தை சந்தியாகு C.Ss.R.

இடைவிடா சகாய அன்னை பங்கு மக்கள் அனைவருக்கும்

நல்வாழ்த்துக்கள்

# ஜெயராம் பேக்கரி™

## ஸ்வீட்ஸ் & ரெஸ்டாரண்ட்

**Perpetual Help Complex,**
**Anjal Nagar, Madurai-18**

Branches:
P.P.சாவடி, K. புதூர், ஐயர் பங்களா, திருநகர், அரசரடி, S.S. காலனி, பசுமலை, நாகமலை புதுக்கோட்டை.

## நன்கொடையாளர்கள்

**V.B.S.**
**3.5.2015 - 10.5.2015**

**வரவு-செலவுகள்**

| | |
|---|---|
| பெயர் வெளியிட விரும்பாதவர் | 220 |
| பெயர் வெளியிட விரும்பாதவர் | 5000 |
| யேசுதாஸ்மனோகரன் –நித்திய ராணி | 3000 |
| பெரரா | 500 |
| பிரபாகரன்–சின்னராணி | 1000 |
| சுதாகர்–அருணா | 1000 |
| ஆல்பர்ட்–கலா | 1000 |
| சென்னை கோயம்பேடு அந்தோணி | 500 |
| அல்போன்ஸ்–பாக்கியராணி | 1000 |
| மரியராஜ்–ரெஜினா மேரி குடும்பம் | 2500 |
| அலெக்சாண்டர்–அருள்ரோசரி | 1500 |
| டென்னிஸ் (ஜெரார்டு மெஜல்லா) | 1000 |
| சத்தியாகப்பர்–அன்பியம் | 500 |
| பெயர் வெளியிட விரும்பாதவர் | 500 |
| ஜோசப்ராஜ்–சகாயரோஸ்பெனடிக்டா | 1000 |
| பாத்திமா கல்லூரி – உதவி பேராசிரியர் | 1000 |
| அந்தோணி ராஜா–நினைவாக | 2000 |
| அருளாணந்தம்–அமிர்தம் | 500 |
| செலின்ரூபி | 500 |
| ஜான்பீட்டர்–லூர்து ஜீவமணி | 500 |
| பெயர் வெளியிட விரும்பாதவர் | 1050 |
| ஜோசப்–சாந்தி | 200 |
| இவான்ரூபி பீட்டர் | 500 |
| ஜார்ஜ் அற்புதராஜ் | 1000 |
| மார்கிரெட் ஜோஸ்பின் பிரியா | 2000 |
| சாம்–ரேவதி சகாயம் | 1000 |
| மொத்த வரவு | **30970** |

## செலவுகள்

| | |
|---|---|
| VBS பிளக்ஸ் 2Nos | 700 |
| சிற்றுண்டி | 5470 |
| காபி – குளிர்பானம் | 1253 |
| விளையாட்டு பொருட்கள் | 386 |
| மதிய உணவு | 120 |
| குடி தண்ணீர் | 1330 |
| பரிசு பொருட்கள் | 9105 |
| ஒளி – ஒலி அமைப்பு | 2500 |
| இரவு உணவு | 8500 |
| மொத்த செலவு | 29364 |
| மொத்த வரவு | 30970 |
| மொத்த செலவு | 29364 |
| மீதி | 1606 |

அன்பளிப்பு

6.5.2015 வடை – திருசிலுவை அருட்சகோதரர்கள் பாதுசா இனிப்பு – C.அமல்ராஜ்-ராணி

| தலைவர்/பங்கு தந்தை | உதவி தலைவர் | செயலர் | பொருளாளர் |
|---|---|---|---|
| | J.பிரான்சிஸ் பாலா | A.கிறிஸ்டோபர் செல்ஸ் | A.ஜார்ஜ் தாமஸ் |

A. Krishna Kumar
Mob. 78100-50001
90953-14642

CARPENTER

CARPENTRY MAINTENANCE
&
CONTRACTING WORKS

தங்களின் வீட்டிற்குத் தேவையான மரவேலைகள் சிறந்த முறையில் குறித்த நேரத்தில் புதிய புதிய வேலைப்பாடுகளுடன் செய்து கொடுக்கப்படும்.

எங்களின் சிறப்பு: கப்போர்டு, சோபா, கட்டில்

No.2 B.M. Compound, Jeeva Main Road,
Sellur, Madurai - 625 002.